Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 37 இதழ் - 8 ஆகஸ்ட் - 2024

தனிப்பிரதி
ரூ.10/-



CHURCH OF CHRIST
KANGAYAM - 638 701. INDIA
PROCLAIM THE GOSPEL

ஜெபியுங்கள் !! திட்டமிடுங்கள் !! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்
இணைந்து நடத்தும்

இருபத்தேழாம் வேதாகம கருத்தரங்கம்

27th Annual Bible Lectureship

நாள் : அக்டோபர் 11, 12 – 2024 (வெள்ளி, சனி)
(அரசு விடுமுறை நாட்கள்)

நேரம்
வெள்ளி : காலை 8:45 - மாலை 4:45 மணி
சனி : காலை 8:45 - மதியம் 1:00 மணி

இடம்
கிறிஸ்துவின் சபை வளாகம்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701. தமிழ்நாடு.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 04257 - 230030 செல் : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572.

## ஆசானின் அறிவுரையிலே ...

1. நிறுவன ஆசிரியர் உரை 3
2. கர்த்தரின் பந்தி 11
3. பெண்கள் பகுதி 13
4. வாலிபர் பகுதி 16
5. சிறுவர் பகுதி 18
6. அடையாளங் காணாத... 20
7. குடும்பம் கட்டப்படுவதில்... 23
8. இயேசுவானவர் தேவ தூதரிலும்... 27
9. அவசியமான ஐந்து காரியங்கள் 32

# THIRUMARAI AASAAN

**S. Rajanayagam**
**Editor**
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 37 Aug - 2024 Issue - 8**


ஆசிரியர் உரை

## விசுவாசத்தை பெலப்படுத்தும் கேள்விகள்!

**கே**ள்விகள் என்பது மனுக்குலத்துக்கு புதிதல்ல. ஆதியிலே மனிதன் தோற்றுவிக்கப்பட்ட காலந்தொட்டுக் கேள்விகள் கேட்கப்பட்டுத்தான் வருகிறது. கேள்விகள் அந்தந்த சூழ்நிலைக்கேற்ப சம்பந்தப்பட்டவர்களால் எழுப்பப்படும். இந்தக் கேள்விகளில் பல வகைகள் உண்டு. ஆம், ஒன்றைத் தெரிந்து கொள்ளும்படியாக, ஒருவரிடமிருந்து பதில் பெறும்படியாக, ஒன்றின் அல்லது ஒருவரின் உண்மைத் தன்மையைச் சோதிக்கும்படியாக இன்னும், ஒரு காரியத்தை விசாரித்தறியும்படியாக என்று பல நிலைகளில் கேள்விகள் இருக்கும். இப்படிப்பட்ட கேள்விகள் மானிடருக்கு மாத்திரம் சொந்தமானதாக இல்லாமல், தேவத்துவத்திலுள்ள மூவருக்கும் கூட இது சம்பந்தடையதாகவே உள்ளது. ஆதியாகமம் 3:9—ல், **நீ எங்கே இருக்கிறாய்?** என்று பிதாவாகிய தேவனாலும், **என்னத்தை தேடுகிறீர்கள்?** (யோவான் 1:38) என்று இரட்சகராகிய இயேசுவாலும் கேட்கப்பட்டுள்ளது. இன்னும், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு எழுப்பப்பட்ட கேள்விகள் பரிசுத்த வேதாகமத்தின் பக்கங்களில் பரவலாக உள்ளதென்பதையும் நாமறிவோம்.

சரி, இவைகளில் ரோமர் நூலில் இடம் பெற்றிருக்கும் கேள்விகளில், ஒரு மூன்றை மட்டும் இம்மாத நமது உரையில் பார்க்க உள்ளோம். அதற்கு முன்பாக நமது வழக்கத்தின்படி இதன் பின்னணிக்குள்ளாக நாம் கடந்து வந்து விடுவோம்.

புதிய ஏற்பாட்டில் ஆறாவது நூலாக இடம்பெற்றிருக்கும் ரோமர் புத்தகம் ஒரு வகையில் ஏனைய நிருபங்களைக் காட்டிலும் மாறுபட்டது. பவுலடியாரின் படைப்புகளில் தனித்துவம் பெற்றது. ரோம் நகரிலிருந்த கர்த்தரின் சபை பவுலடியாரால் ஆரம்பிக்கப்படாத ஒரு

சபை. பெந்தெகொஸ்தே பண்டிகைக் கொண்டாட்டத்தின்போது எருசலேமுக்கு வந்திருந்து [அப். 2:10] அந்நாளில் பேதுரு அப்போஸ்தலனால் செய்யப்பட்ட அந்த மகாப் பிரசங்கத்தைக் கேட்டு, நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த 3000 பேரில் பலராக இருந்து, தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் சென்ற கிறிஸ்தவர்களாலும் மற்றும் காலப் போக்கில் பல காரணங்களுக்காக அன்றைய உலகின் தலைநகராக இருந்த ரோமாபுரிக்குப் புலம் பெயர்ந்த கிறிஸ்தவர்களாலும் இச்சபை ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. எது எப்படியிருந்த போதிலும் இவர்கள் தங்கள் விசுவாச வாழ்வுக்காக அன்றைய உலகமனைத்திலும் புகழ்பெற்று இருந்துள்ளார்கள். [1:8] தன்னால் நேரிடையாகப் போதிக்கப்பட்ட கொரிந்து, கலாத்திய போன்ற சபையார் பக்தி வாழ்வில் பாதகச் சூழலுக்குள் கடந்து போய்க் கொண்டிருக்கும் போது, இவர்களின் மேம்பட்ட விசுவாசம் பற்றிக் கேள்விப்பட்ட பவுலடியாருக்கு இவர்களைக் காண வேண்டுமென்ற ஆசை வருகிறது. ஆயினும். பல முறை தடையுண்டானபடியால், [1:11-13] அவர்கள் பற்றித் தான் கேட்டறிந்தவைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வழகிய நிருபத்தை வடித்துள்ளார்.

புதிய ஏற்பாட்டில் முதல் நான்கு நூல்கள் இயேசு ஆண்டவரின் வாழ்க்கையையும், அவருடைய வார்த்தைகளையும் பற்றிக் கூறும்போது, இந்நூல்இயேசுவின் தியாக மரணம் பற்றி வலியுறுத்திக் கூறுகிறது. இது இறைக் கோட்பாடுகளடங்கிய நூல் என்பதைத் தாண்டி, நடைமுறை பக்தி வாழ்வு சம்பந்தப்பட்ட போதனைகளின் தொகுப்பாகவும் உள்ளது. **தான் நேரில் பார்க்க வாய்ப்புப் பெறாத ரோமாபுரி சபையார் இடத்தில் தன்னை வைத்து, தான் எழுதுவதை அவர்கள் வாசிக்கும் போது, அவர்களுக்குள்ளாக எப்படிப்பட்ட கேள்விகள் எழ வாய்ப்புள்ளதென்பதை எண்ணி, அக்கேள்விகளை அவர்கள் சார்பாகத் தானே எழுப்பி அதற்கான பதிலைக் கொடுத்துள்ளார்.** இது வேதாகமத்தின் எந்த நூலுக்கும் இல்லாத ஒரு சிறப்பு. இயேசுவின் தியாக மரணத்தை இந்நூல் வலியுறுத்திக் கூறுவதால், பல வேத பண்டிதர்கள் இந்நூலை **பவுலடியார் எழுதின நற்செய்தி நூல்**' என்று சிலாகித்து அழைக்கிறார்கள்

இப்படிப்பட்ட நூலின் எட்டாம் அதிகாரத்தில் தான், நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்தும் அந்த மூன்று கேள்விகளும் இடம் பெற்றிருக்கிறது. இவ்வதிகாரத்தை நான்கு பகுதிகளாக நாம் பிரிக்கலாம் 1] 1-11, மாம்சத்தின் அதிகாரத்திலிருந்து ஆவி விடுதலையாக்குகிறது. 2] 12-17 ஆவி புத்திர சுவிகாரத்தைத் தருகிறது 3] 18-30 ஆவி எதிர்கால மகிமையை உத்திரவாதப்படுத்துகிறது. 4] 31-39 ஆவி முற்றும் ஜெயங்கொள்ளச் செய்கிறது. இந்த நான்காம்

பகுதியில் தான் நமக்கான கேள்விகள் வருகிறது. இந்நான்கு கேள்விகளுமே பதில் **தேவைப்படாத** அல்லது **எதிர்பார்க்கப்படாத** கேள்விகள். இக்கேள்விக்கான பதில்கள் 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ இருக்கும். ஆயினும், அந்தந்த சூழ்நிலைகளில் இப்பதில்களைச் சொல்ல வேண்டிய அவசியம் அங்கு இருக்கிறது.

சரி, இக்கேள்விகளை நாம் நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்தும்படியாக ஒவ்வொன்றாகப் பார்த்துப் பயனடைவோம்.

**I. தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால்...**

நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்தும் கேள்விகளில் முதலாவதாக நாம் பார்ப்பது, தேவன் நம்டைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் ? என்பது.

நாம் ஏற்கனவே கண்டதுபோல இக்கேள்விக்கு பதிலே தேவையில்லை. ஏனெனில், இறை உணர்வும், தெய்வ நம்பிக்கையும் உள்ள எல்லோரும் இதை ஏகமனதாக ஏற்றுக்கொள்வர். ஏனெனில், தேவன் ஞானத்திலும், பெலத்திலும் வல்லவர் என்பது அவர்களுக்குத் தெரியும் (யோபு 12:16)

ரோமர் 8:31 –ஐ கவனியுங்கள், இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்டைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் ? அப்படியானால், எவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? இவ்வதிகாரத்தில் இதற்கு முன் சொல்லப்பட்டவைகளில் என்ன இருக்கிறது ? நாம் துன்புறுத்தப்பட்டு அசட்டை செய்யப்பட்டோம், உண்மைதான். ஆயினும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலம் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளதே (8:28). ஆகையால், இப்படிப்பட்ட உபத்திரவங்களிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளும் ஆறுதல் என்ன ? தேவன் நம்டைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் ? என்பதே

தேவன் நமது பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாக யாரும் இருக்க முடியாது என்பதை நூனின் குமாரனாகிய **யோசுவாவும்.** எப்புன்னேயின் குமாரனாகிய **காலேபும்** அறிந்து வைத்திருந்தார்கள் கானானை வேவு பார்க்க மோசேயால் அனுப்பப்பட்ட 12 பேரில், இருவராகிய இவர்கள், **கர்த்தர் நம்மேல் பிரியமாயிருந்தால், அந்தத் தேசத்திலே நம்மைக் கொண்டு போய் பாலும், தேனும் ஓடுகிற அந்தத் தேசத்தை நமக்குக் கொடுப்பார். கர்த்தருக்கு விரோதமாக மாத்திரம் கலகம் பண்ணாதிருங்கள்; அந்த தேசத்தின் ஜனங்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டியதில்லை: அவர்கள்**

**நமக்கு இரையாவார்கள்: அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று. கர்த்தர் நம்மோடே இருக்கிறார். அவர்களுக்கு பயப்பட வேண்டியதில்லை** என்றார்கள் (எண் 14:8,9) இன்னும், இந்த உண்மையை ஏசாயா தீர்க்கனும் வெளிப்படுத்தியிருக்கிறார். யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே பயப்படாதே; **நான் உனக்குத் துணை நிற்கிறேன்** என்று கர்த்தரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய உன் மீட்பர் உரைக்கிறார்' (ஏசாயா 41:14) இன்னும் தெளிவாக யோவான் அப்போஸ்தலன், **ஏனெனில், உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்** (1யோவான் 4:4) என்று விளம்பியுள்ளார்.

ஆகையால், அருமையானவர்களே இப்பூலோக வாழ்வில் நாம் தேவனுக்கான பக்தி வாழ்வில் நம்மை ஈடுபடுத்தியிருக்கும்போது எப்படிப்பட்ட சூழலுக்கும் நாம் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. அது சரீர வாழ்வுச் சூழலாக இருந்தாலும், ஆவியின் வாழ்வு சூழலாக இருந்தாலும் எல்லாம் அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் தான் உள்ளது. தேவன் மோசேயின் மரணத்திற்குப் பின் கொடுத்த வாக்கு இன்றைக்கும் பொருள் பொதிந்ததாகவே உள்ளது. **நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்தது போல. உன்னோடும் இருப்பேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை** (யோசுவா 1:9), எல்லாக் காலத்திலும் வாழ்ந்த தேவ மனிதர்கள் இந்த உண்மையைப் புரிந்து தான் தங்கள் பக்தி வாழ்வை நடத்தியுள்ளார்கள். ஆம், அது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ (தானியேல் 3:16) மற்றும் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் (அப் 29) என்று அனைவரும் தேவன் நம்முடைய பட்சத்திலிருக்கும் போது யாரும் விரோதமாக, எதிர்ப்பாக இருக்க முடியாது என்றே வாழ்ந்து மரித்துள்ளார்கள்.

அப்படியானால், நமது பக்தி வாழ்வில் நாம் எப்படிப்பட்ட வாழ்வு வாழ நம்மை ஒப்புக் கொடுத்துள்ளோம் ? கிறிஸ்தவம், சோதனைகளையும், சவால்களையும் உள்ளடக்கிய ஒரு வாழ்க்கை தான். வேதாகமம் இந்த உண்மையை மறைக்கவில்லை (2 தீமோ. 3:12) ஆகையால், நம்முடைய பக்தி வாழ்வில் எச்சூழலிலும் தேவன் பட்சமாக, அவருடைய வார்த்தைகளின் பட்சமாக, கிறிஸ்துவின் உபதேசங்களின் பட்சமாக நின்று நம்முடைய பக்தி வாழ்வைப் பாங்காக நடத்துவோம்.

**II. தேவன் மற்ற எல்லாவற்றையும் அருளாதிருப்பது எப்படி?**

நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்தும் கேள்விகளில்

இரண்டாவதாக நாம் பார்ப்பது, மற்ற எல்லாவற்றையும் தேவன் நமக்கு அருளாதிருப்பது எப்படி ? என்பது.

பரிசுத்த வேதாகமத்தில் காணப்படும் மிக அழகான, ஆறுதலான, நம்பிக்கைதரும் வசனங்களின் பட்டியலில் ரோமர் 8:32 –க்கு முக்கிய இடம் உண்டு. **தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லோருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?** என்றுள்ளது. தேவன் நம்மேல் வைத்த அன்பினிமித்தம் தம்முடைய ஒரே பேறான குமாரனையே நமக்காகக் கொடுத்தார். இது குறித்து யோவான் நற்செய்தியாளன் கூறும்போது, **தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல், நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.** [யோவான் 3:16] என்று எழுதியுள்ளார். பிதாவாகிய தேவன் இப்படித் தனது சொந்தக் குமாரனையே கொடுத்துவிட்டு, அவர் மூலமான இரட்சிப்புக்கானவைகளைத் தராதிருக்கமாட்டார் என்பதே இதன் நேரடிப் பொருள்.

நித்திய காலத்துக்கும் தன்னோடிருந்த விலையேறப்பெற்ற தன்னுடைய குமாரனையே தந்தவர், அவரோடே கூட இரட்சிப்பைப் பூரணப்படுத்துவதற்கான ஈவுகளைக் கட்டாயம் தருகிறார். இந்த தேவன், அவருடைய குமாரனுடைய நற்செய்தியைக்கேட்டு உண்மையாகவே இரட்சிப்படைய விரும்பும் ஆத்துமாக்கள் அதற்கான அறிவைப் பெற்றுக் கொள்ளாமலிருப்பதை அனுமதிப்பாரா ? இவர்கள் தான் இரட்சிப்படைய வேண்டுமென்று தேவன் தீர்மானிப்பதில்லை. ஏனெனில், அவர் பட்சபாதமில்லாதவர் [அப். 10:34,35]. ஆகவே தான், புறவினத்தானான கொர்நெலியு, மெய் பக்தி வாழ்வுடையவனாயிருந்தபடியால் அவன் இரட்சிப்படைவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தார் [அப். 10–ம் அதி]. இந்த தேவன் தான் **எத்தியோப்பியா மந்திரி** [அப் 8–ம் அதி], **லீதியாள், பிலிப்பிய சிறைச்சாலைக்காரன்** [அப் 16– அதி] போன்றவர்கள் இரட்சிக்கப்படுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார். கிறிஸ்துவின் நற்செய்தியை ஏற்றுக்கொள்வது மாத்திரமல்ல, இறுதிவரை இரட்சிப்பில் உண்மையாயிருப்பவர்கள் காரியத்தில் தேவையானவைகளைத் தேவன் அருளாதிருப்பதில்லை.

இப்படி தேவன் அருளாதிருக்கமாட்டார் என்கிற உண்மை ஆவியின் வாழ்வுக்கு மட்டுமல்ல, சரீர வாழ்வுக்கும் பொருள் கொண்டதாகவே இருக்கிறது. இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் **முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய**

**நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்** என்று விளம்பியுள்ளார் (மத். 6:33). இங்கே, 'இவைகளெல்லாம் என்பது பூமியின் வாழ்வுக்கானவைகள் பற்றியே பேசுகிறது. இதே பொருளில், பவுலடியார் எபேசுப் பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, **நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற** தேவன் என்று எழுதுகிறார் (எபே.3:20).

அருமையானவர்களே, **பிதாவாகிய தேவன் தம்முடைய சொந்தக்** குமாரனையே ஈவாக நமக்குத் தந்து, அவரோட கூட இரட்சிப்புக்கு உகந்தவைகளை ஆவியின் வாழ்வுக்காக அருளுகிறது போல, சரீர வாழ்வுக்கான தேவைகளையும் குறைவில்லாமல் சந்திக்கிறவராகவே இருக்கிறார். இந்த உண்மையை அப்போஸ்தலன் யோவான் இன்னும் உரக்கக் கூறுகிறார் பாருங்கள். **பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்** என்று (3 யோவான் 2) ஆகவே, தேவனால் ஈவாகக் கொடுக்கப்பட்ட அவருடைய குமாரனின் நற்செய்திப் போதனைகளை உண்மையான அளவில் ஏற்றுக்கொண்டு உறுதிபட வாழ்வோமானால், இம்மை மற்றும் மறுமையின் ஆசீர்வாதங்களுக்கு நாம் நிச்சயம் சொந்தமாக மாறுவோம்.

### III. கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?

நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்தும் கேள்விகளில் நாம் மூன்றாவதாகப் பார்ப்பது, கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார் ? என்பது.

பரலோக தேவன் நம்முடைய பட்சத்திலிருந்து, இயேசுவானவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து நமக்காகப் பரிந்து பேசுகிறவராகவும், பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளாக வாசம் செய்து, வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறவராயுமிருந்தால், நம்மைப் பாதுகாக்கும் கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மை யாரால் பிரிக்க முடியும்? ஒருவராலும் முடியாது. ஒருவேளை, அது உபத்திரவமாக இருந்தாலும், வியாகுலமாக இருந்தாலும், துன்பமாக இருந்தாலும், பசியாக இருந்தாலும், நிர்வாணமாக இருந்தாலும், நாசமோசமாக இருந்தாலும், இன்னும் அது பட்டயமாகவே இருந்தாலும் அது நம்மை ஒன்றும் செய்யாது. ஏனெனில், பரலோகத்தில் தேவன் தம்முடையவர்களுக்கு வைத்திருக்கும் நித்திய கனத்திற்கும், மகிமைக்கும் முன் இவைகளெல்லாம் ஒரு பொருட்டே அல்ல (ரோமர் 8:18) அவைகள்

அது சீக்கிரத்தில் நீங்கிவிடும் [2 கொரி. 4:17].

இச்சீரிய கருத்துக்கான சிறந்த எடுத்துக்காட்டு அப்போஸ்தலன் பவுலடியார் தான். கிறிஸ்தவ வாழ்வுக்காகவும், கிறிஸ்துவின் நற்செய்திக்காகவும் அவர் பட்டபாடுகளை மனிதர் எப்படியாகப் பட்டியலிடுகிறார் பாருங்கள். அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம். புத்தியீனமாய்ப் பேசுகிறேன், நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன் அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரணஅவதியில் அகப்பட்டவன், யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன், மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன். மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன். கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன், அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன், ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும் என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும் குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன் [2 கொரி 11:23–27] இவ்வசனங்களில் நம்மால் நினைத்தே பார்க்க முடியாத ஒரு நீண்ட பட்டியலாக 25 சவாலான சூழ்நிலைகள் இடம் பெற்றுள்ளது.

ஆயினும், இவைகள் எதுவும் பவுலடியாரைக் கிறிஸ்துவின் அன்பை விட்டுப் பிரிக்க முடியவில்லை. ஆகவே தான், பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் **கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்** என்று மார்தட்டுகிறார் [பிலி 1:21].

அருமையானவர்களே கிறிஸ்துவின் மீது நாம் ஒவ்வொருவரும் கொண்டிருக்கும் அன்பு எப்படிப்பட்டதாக உள்ளது. எந்தச் சூழ்நிலைக்கும் ஈடுகொடுக்கக்கூடியதாக நம்முடைய அன்பு உள்ளதா ? ஒருவேளை கிறிஸ்துவின் மீது நாம் உண்மையாகவே அன்பு காட்டுகிறவர்களாயிருந்தால், அதே அன்பை கிறிஸ்து வாக்களித்துக் கட்டின ஒன்றான மெய் சபையின் மீதும் நாம் காட்டுகிறவர்களாக இருக்க வேண்டும். **ஏனெனில், கிறிஸ்துவையும், சபையையும் பிரிக்க முடியாது. பெரும்பாலான கிறித்தவ சமுதாயத்திற்கு இந்த உண்மை புரிவதில்லை.** தயவாய் கவனியுங்கள், அப்போஸ்தலன்

புவுலடியார் சவுலாக இருந்த நிலையில் எருசலேமிலிருந்த இயேசுக் கிறிஸ்துவின் சபையைப் பயறுத்திப் பாழ்படுத்தியதோடு திருப்தியடையாமல், அதே கைங்காரியத்தை தமஸ்கூவிலும் செய்யும்படியாய் தமஸ்கூவுக்கு சீறிச்செல்லும் வழியில், ஓர் ஒளியின் மூலமாக இயேசு அவனை இடைமறித்துச் சந்தித்து, **சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்** என்று கேட்டுள்ளார் [அப் 92–4] அப்பகுதியை கவனித்தால், உண்மையில் சவுல் கிறிஸ்து இயேசுவை ஒன்றுமே செய்யவில்லை. கிறிஸ்துவின் சபையைத் தான் அவன் துன்பப்படுத்தினான். ஆயினும் இயேசு, **என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்**? என்றே வினவியுள்ளார் புரிகிறதா?. **கிறிஸ்துவையும், சபையையும் பிரிக்க முடியாததென்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும்.**

ஆனால், மிகப் பெரும்பாலான கிறித்தவர்கள், எவ்களுக்குக் கிறிஸ்து வேண்டும் ஆனால், அவர் வாக்களித்துக் கட்டின ஒன்றான மெய்ச் சபை வேண்டாம் என்ற நிலைப்பாட்டோடு, மனிதப் பெயர்களைக் கொண்ட சபைகளிலே, மனிதர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாரம்பரிய சபைகளிலே தங்கள் பக்தி வாழ்க்கையைத் தொடருகின்றனர். கிறிஸ்துவும், அவருடைய சபையும் இல்லாத ஒரு பக்தி வாழ்வு ஒருவனைப் பரலோகத்திற்கு நிச்சயம் கொண்டு போகாது. ஏனெனில், யோவான் நற்செய்தி நூலில் **நான் சொன்ன வசனமே ஒருவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்** என்று இயேசு கூறியுள்ளார் [1 யோவான் 12:48] தேவனிலும், கிறிஸ்துவிலும் அன்பு கூருகிற ஒருவன், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்று நாம் போதிக்கப்படுகிறபடியால் [1 யோவான் 5:3] தேவன் மீதான, கிறிஸ்துவின் மீதான நம்முடைய அன்பு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வசனங்களின் வழியானதாக இருக்கிறதா என்பதை உறுதி செய்துகொண்டு கிறிஸ்துவின் மீதான நம்முடைய அன்பு அவரிடமிருந்து நம்மைப் பிரிக்க முடியாத அன்பாக இருக்கும்படி பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம்.

ஆக, நாம் கவனித்த இம்மூன்று கேள்விகள் வழியாக நாம் ஒவ்வொருவரும் நம்முடைய விசுவாசத்தைப் பெலப்படுத்தி, பரலோக பாக்கியத்துக்கு பங்காளிகளாக மாறுவோம்! தேவன் தாமே நம்மை விசுவாசத்தில் பெலப்படுத்தி ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

# கர்த்தரின் பந்தி

J.C. சோட்

**சென்ற மாத இதழின் தொடர்ச்சி...**

*5.* இந்தப் பந்தியில் அபாத்திரமாக யாராவது பங்கு பெற்றால். கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் குறித்து அவன் குற்றமுள்ளவனாக இருப்பான்.

*6.* ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்தப் பந்தியில் பங்கு பெற வேண்டும்.

*7.* அபாத்திரமாக இந்தப் பந்தியில் பங்கு பெறுபவர்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளுகிறார்கள்.

பவுல் கூறும் இந்த முக்கிய குறிப்புகளை நாம் மிகவும் கவனமாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நமது பாடத்தை தொடரும்போது, மேலும் பல காரியங்களை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்:

*1.* ஒரே ஒரு பாத்திரத்தில் மட்டுமே இரசத்தை பருகலாம் என கர்த்தர் போதிக்கவில்லை. சில வேளைகளில் மக்கள் அனைவரும் சேர்ந்து முடிவெடுத்து ஒரே பாத்திரத்தில் எல்லாரும் இரசத்தைப் பருகுகின்றனர். நல்லது, பாத்திரத்திலுள்ள பொருளுக்குத்தான் (திராட்ச ரசம்) கர்த்தர் முக்கியத்துவம் கொடுத்தாரே தவிர, பாத்திரத்திற்கு கர்த்தர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரும்படி பங்கு கொள்ளுவது மட்டும்தான் முக்கியமே தவிர, பாத்திரம் ஒன்றா அல்லது அதிகமா என்பது பிரச்சினை அல்ல. ஒரே பாத்திரத்தில் பலரும் பருகுவது வேதத்தின்படி தவறல்ல; என்றாலும் சுகாதார காரணத்திற்க ாகவும் பிற காரணங்களுக்காகவும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சிறு பாத்திரத்தில் இரசத்தைக் கொடுப்பதும் வசனத்தின்படி தவறல்ல.

*2.* கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவதால், கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூருவதோடு கர்த்தரின் இரண்டாம் வருகையை விசுவாசிக்கும் ஒரு மக்கள் கூட்டம் இருக்கிறது என்பதை சகலருக்கும் நினைப்பூட்டும் ஒரு செயலாகவும் இருக்கிறது.

*3.* வாரந்தோறும் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் போது, கடந்த வாரம் முழுவதும் ஒவ்வொருவரும் வாழ்வில் செய்த தவறுகளை நினைக்கவும், அல்லது கடந்த பல வாரங்களாக கர்த்தரின் பந்தியில் பங்கு பெறாவிடில் தன்னுடைய தற்போதைய ஆவிக்குரிய நிலைபற்றி சோதித்து, மனந்திரும்ப ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. தன்னால் முடிந்த வரையில் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவனாக வாழ்ந்திருப்பதாகக் கண்டால், பின் அவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவது இயற்கையே என்ற போதிலும், தனது வாழ்வில் பாவங்கள் இருப்பதாகக் கண்டால்,

முதலில் அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு, திருந்திக் கொள்ளும் போது கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுகிறான்.

அபாத்திரமாக (தகுதியில்லாமல்) ஒருவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றால், நித்திய இரட்சிப்புக்காக அப்பத்தில் புசித்து ரசத்தில் பானம் பண்ணுவதற்குப் பதிலாக, தனக்குத் தானே ஆக்கினையை வரவழைத்துக் கொள்ளுகிறான். சந்தேகமின்றி, நாம் அனைவரும் பாவம் செய்கிறவர்களாக இருப்பதால் ஒருவருமே தகுதி பெற்றவர் அல்ல; என்ற போதிலும், நாம் பூரணமானவர்கள் அல்ல என கர்த்தர் அறிவார். எனவே, நம்மால் இயன்ற அளவு நாம் சோதித்து மனஸ்தாபப்படும் போது, கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தப்படுகிறோம். ஆனால், வேண்டுமென்றோ கவலையற்று அலட்சியமாகவோ பாவம் செய்தால் அவன் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளத் தயாராக இல்லை. அப்படிப்பட்டவன் பங்கு பெறும் போது அவன் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளுவதோடு, பிறரும் அவனைச் சரியானவன் என நம்பும்படிச் செய்வதால், அவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறாமல் வீழ்ந்து போவதைக் காட்டிலும் அதிகமாக ஆக்கினைத் தீர்ப்படைகிறான். ஆனால், கர்த்தருக்குத் தெரியும். அவன் தனது வாழ்க்கையை திருத்திக் கொண்டால், ஆவிக்குரிய விதத்திலும் வசனத்தில் கண்டபடியும் அதில் பங்கு பெறலாம்.

*1.* கர்த்தரின் பந்தியில் பங்கு பெற யாருக்கும் நாம் தடை விதிக்கக்கூடாது. எனவே, ஒரு சிலரை பந்தியில் அனுமதிப்பதும் சிலருக்கு அனுமதி மறுப்பதும் கூடாது. நம்மை நாமே சோதிக்க வேண்டும் என்ற அடிப்படையில், வசனம் பந்தியில் கலந்து கொள்ள வழி செய்கிறது. சபையிலே அங்கத்தினரல்லாத ஒரு மனிதன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றாலும் ஆத்திரப்பட வேண்டாம். அவர் சத்தியத்தை அறியும் போது, தேவனுக்கு அவர் கீழ்ப்படிவார். கர்த்தரின் பந்தியில் பங்கு பெற அவருக்கு அனுமதி மறுத்தால், பின்னர் அவர் ஒருபோதும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய்விடலாம்.

முடிவாக, ஆதிக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் அப்பம் பிட்கும்படி கூடி வந்தார்கள், என அப்போஸ்தலர்கள் நடபடி 20:7ம் வசனத்தில் படிக்கிறோம். ஆகவே, நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். ஆனால், வாரத்தின் எந்த முதல் நாள்? வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளும் தான். ஒரு குறிப்பிட்ட வாரத்தின் முதல் நாளில் மட்டுமே கர்த்தரின் பந்தியில் பங்கு பெற வேண்டுமென உங்களுக்கு அல்லது எனக்கு அல்லது வேறு எவருக்காகிலும் அதிகாரம் கொடுத்தது யார்? ஒருவரும் அவ்விதமான அதிகாரத்தை அளிக்கவில்லை. எனவே, தேவன் எவ்வாறு செய்தாரோ அவ்வாறே நாமும் செய்வோம். அதாவது, அவரை ஆராதிக்க அவருடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாள் கூடி வந்தனர். கர்த்தரின் பந்தியும் இந்த ஆராதனையில் அடங்குகிறது. ✝

பெண்கள் பகுதி

# விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

Sis. ரேச்சல் நாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு ஸ்தோத்திரங்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். **விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்** என்ற தலைப்பின் கீழ் சில பாடங்களை பரிசுத்த வேதாகமத்தின் துணைகொண்டு கற்றுக் கொள்வோம். பிரியமானவர்களே, வேதத்தை கேட்கிறவர்களாக மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாக இருக்க வேண்டும் (யாக் 1:22-24) என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

(மத் 26:36-41) முடிய உள்ள வசனப் பகுதியில் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்ற வார்த்தை இடம் பெற்றுள்ளது. பஸ்கா பண்டிகை முடித்த பின்பு இயேசு தன்னுடனே மூன்று சீஷர்களை கூட்டிக்கொண்டு **கெத்செமனே** என்னப்பட்ட இடத்திற்குச் சென்றார். பேதுரு, யாக்கோபு, யோவான் (மாற்கு 14:33) என்ற மூன்று பேர் ஆத்துமா மிகவும் வியாகுலப்பட்டிருக்கிறது என்று இயேசு அம்மூவரிடமும் சொன்னார்.

1. தன்னோடிருக்கிற ஒருவராலே காட்டிக் கொடுக்கப் படப்போகிறோம் என்பதை அவர் அறிந்திருந்தார்.

2. தான் பாடுபடும்போது தன்னோடிருக்கும் சீஷர்கள் தன்னை விட்டு போய்விடுவார்கள் என்றும் அவருக்கு தெரியும்.

3. மனுக்குலம் முழுமைக்கும், நம் ஒவ்வொருவரின் பாவங்களுக்கும் வேண்டி அவர் அனுபவிக்கப் போகும் பாடுகளை சகித்துதான் ஆக வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

4. நம் பாவங்களுக்கு விலையாக அவர் பலியாக தன்னை அவமானமான மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்பது அவருக்கு நன்கு தெரியும். அவருடைய ஆத்துமா மரணத்துக்குக் கேதுவான துக்கம் கொண்டிருந்தது.

எனவே, அவர் தன் பிதாவிடம் மன்றாடச் செல்லும்போது தான் சீஷர்களிடம் அங்கேயே தங்கி விழித்திருங்கள் என்று கேட்டார். வசனம் 39ல் நாம் வாசிக்கிறோம், சற்று அப்புறம் போய், முகங்குப்புற விழுந்து ; என் பிதாவே, இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும் ; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். தன் சித்தமல்ல, தன் பிதாவின் சித்தம் செய்யவே இயேசு விரும்பினார்.

பின்பு அவர் திரும்பி வந்தபோது சீஷர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி; நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா ? என்றார்.

பிறகு தான் இயேசு பேதுருவிடம் ஒரு எச்சரிப்பைக் கொடுக்கிறார் 41–ம் வசனத்தைப் பாருங்கள்.

41 வசனத்தை வாசிக்கும் போது நீங்கள் சோதனைக்குட் படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்று எச்சரிப்பு கொடுக்கிறார்.

சரி **விழித்திருந்து** என்பதின் பொருள் என்னவென்று பார்ப்போம் விழித்திருத்தல் என்பது கவனம் செலுத்து, தயாராயிரு, ஆயத்தமாயிரு, பாதுகாப்பாயிரு என்று பொருள்படும்.

1. எதைச் செய்கிறோமோ அதில் கவனமாயிருத்தல் மத் 25:1–13 ல் உள்ள பத்து கன்னிகைகள் சம்பவம் மிகச்சிறந்த உதாரணம். ஆயத்தமாயிருந்தவர்கள் எண்ணெயையும் கொண்டு போயிருந்தனர். புத்தியில்லாதவர்களோ போதுமான எண்ணெய் வைத்திருக்கவில்லை. மணவாளன் வந்தபோது விளக்கேற்ற முடியவில்லை, இழந்து போனார்கள். நாமும் எல்லாவற்றிலும் கவனமாய் இல்லையென்றால் தேவனை சந்திக்க முடியாது.

2. மாற்கு 13:32,33–ல், அந்த நாளையும், அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான் பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார். அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள். **விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்.** எனவே, எப்போதும் தயாராயிருக்க வேண்டும்.

3. ஆயத்தமாயிருக்க வேண்டுமென்றால் 2 தீமோ 42–ன் படி சமயம் வாய்த்தாலும், வைக்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தை பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்து கொண்டு புத்தி சொல்லு என்று வாசிக்கிறோம். தேவ வசனத்தை போதித்து, எச்சரித்து வசனத்துக்கு கீழ்ப்படியும்படியாய் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும்.

**ஆயத்தம்மாயிருந்தவர்களில்** பழைய ஏற்பாட்டில் எஸ்றாவை நாம் காண முடியும். எஸ்றா 7:10–ல் கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும் இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்.

பாதுகாப்பாக இருப்பதற்கு 1 பேதுரு 5:8 –ல், **தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருங்கள், விழித்திருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான்** என்று எச்சரிக்கப்படுகிறோம்.

**II.** ஜெபம் : தேவனோடு பேசுவது.

பிலிப்பியர்: 46,7

**1. எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்.**

**2. தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணுங்கள்.**

a) உன் மனதிலும், உள்ளத்திலும் இருப்பதை தேவனிடம் சொல்லுங்கள்

b) எது தேவையோ அதை கேளுங்கள்.

c) அவர் செய்த எல்லாவற்றிற்காகவும் நன்றி சொல்லுங்கள்.

உதாரணமாக, அன்றாட தேவைகள், அவருடைய குமாரனுக்காக நம்மை வழி நடத்தும் அவருடைய வார்த்தைகளுக்காக, அவருடைய சரீரமாகிய சபைக்காக நன்றி செலுத்த வேண்டும்

3. நாம் இவைகளைச் செய்யும்போது நமக்கு தேவ சமாதானம் கிடைக்கும். நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப் போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்பு கூரவும், அவர் வழிகளில் நடக்கவும், அவர் கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளவும் நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன் (உபா. 30:16)

அருமையானவர்களே! ஆசீர்வாதங்கள் அனைத்தும் அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்வதில் இருக்கிறது. விழித்திருந்து. ஜெபம் பண்ணும்போது மட்டுமே ஆவிக்குரிய வாழ்வு பலமடைகிறது, இவை இரண்டும் இல்லாவிட்டால் ஒரு முழுமையான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ இயலாது. எனவே, இந்த பாடத்தைஞ் ; படித்து நம் வாழ்க்கையில் கடைப்பிடிப்போம். தேவன் அதற்கு உதவி செய்வாராக! ஆமென்!!

**இயேசு அற்புதங்களைச் செய்யும் போது சொன்ன சிறு வார்த்தைகள்!**

| | | |
|---|---|---|
| 1. சுத்தமாகு | – | லூக்கா 5:13. |
| 2. கையை நீட்டு | – | மாற்கு 3:5 |
| 3. வீட்டுக்குப் போ | – | மாற்கு 2:11. |
| 4. தலித்தா கூமி | – | மாற்கு 5:41 |
| 5.ஆகக்கடவது | – | மத்தேயு. 9:29. |
| 6. எழுந்திரு | – | லூக்கா 7:14 |
| 7.வெளியே வா. | – | யோவான் 11:43. |
| 8. புறப்பட்டுப்போ | – | மாற்கு 5:8,9 |

வாலிபர் பகுதி

# வாழ்க்கையின் பார்வை

Dr. **ஏபில் நாயகம்**

*(சென்ற மாத தொடர்ச்சி...)*

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த மாதம் நாம் '**வாழ்க்கையின் பார்வை**' என்ற தலைப்பின் கீழ் வேதாகமத்தின் துணையோடு சில காரியங்களை கற்றுக்கொண்டோம். இவ்வுலக வாழ்க்கைக்கான நோக்கம் என்ன ? என்ற கேள்விக்கான பதிலை நாம் தேடும் முயற்சி இது. அதன் தொடர்ச்சியாக இம்மாதம் இரண்டாவது உருவகத்தை நாம் பார்க்கலாம். சென்ற மாதம் நாம் பார்த்த உருவகம் '**இவ்வுலக வாழ்க்கை ஒரு சோதனை**' என்பது. இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் உருவகம் '**இவ்வுலக வாழ்க்கை நம்பிக்கையின் நிறைவேற்றுதல்** என்பது.

இவ்வுலக வாழ்க்கை, நம்முடைய பெலன், அறிவு நாம் பெற்றிருக்கும் உறவுகள், நமக்கு கிடைக்கும் வாய்ப்புகள் என இவை எல்லாமே தேவனால் ஒரு நம்பிக்கையோடு நம் பராமரிப்பின் கீழ் ஈவாக கொடுக்கப்பட்டது. தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டிருந்த அனைத்திற்கும் நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம் என்பதை புரிந்து கொண்டால், தேவன் மட்டுமே அனைத்திற்கும் சொந்தக்காரராக இருக்கிறார் என்பதை நாம் எளிதாக புரிந்துகொள்வோம். **பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது** என்று சங்கீதம் 24:1 இல் நாம் வாசிக்கிறோம். நாம் வெறுமனே பராமரிப்பு மட்டுமே செய்ய தேவனால் படைக்க பட்டிருக்கிறோம்

இப்பூமியில் நாம் வாழும் குறுகிய காலத்தில் எந்த ஒரு காரியத்தையும் நாம் சொந்தமாக்கிக்கொள்ள முடியாது. எனக்கு சொந்தம் என்று நாம் நினைக்கும் அனைத்துமே தேவனால் நமக்கு இரவலாகக் கொடுக்கப்பட்டவை ஆகும். நம் பிறப்பிற்கு முன்னால் அது தேவனுடையதாய் இருந்தது. நம் நாட்களுக்கு பின் அது இன்னொரு வருக்கு இரவலாக கொடுக்கப்படுகிறது. எனவே, '**என்னுடையது**' என்று நாம் நினைக்கும் எல்லாமே நாம் தற்காலிகமாக அனுபவிக்க தேவனால் கொடுக்கப்பட்டவையே இந்தப் புரிதல் அவசியம்.

ஏதேன் தோட்டத்திலே ஆதாம், ஏவாளை தேவன் சிருஷ்டித்த பொழுது தன்னுடைய எல்லாப் படைப்புகளையும் பராமரிக்க தேவன் அவர்களுக்கு பொறுப்பை கொடுத்தார். [ஆதியாகமம் 1:21]. 'பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப்

பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி அவர்களை ஆசீர்வதித்தார்.

தேவன் மனிதர்களுக்கு கொடுத்த முதல் வேலை தன்னுடைய படைப்புகளை பராமரிக்க வேண்டும் என்பது தான். இதில் இன்று வரை எந்த மாற்றமும் வரவில்லை. இன்றைக்கும் இப்பூவில் நம் வாழ்வின் நோக்கங்களில் ஒன்று இதுவே. நாம் அநுபவிக்கின்ற ஒவ்வொன்றும் நாம் பராமரிப்போம் என்ற நம்பிக்கையோடு தேவனால் நம்மிடத்தில் கொடுக்கப்பட்டவை ஆகும். உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வற்றையே நீங்கள் அனுபவிக்கிறீர்கள். தேவனால் உங்களுக்குத் தரப்பட்டவை உங்களுக்கு வாய்த்திருக்கையில், அவற்றை உங்கள் வல்லமையால் பெற்றதாக நீங்கள் ஏன் பெருமை அடைய வேண்டும்? (1 கொரிந்தியார் 4:7). உலகத்தாருடைய பார்வை என்னவென்றால், நாம் ஒன்றை நமக்கு சொந்தமாக்கிக்கொண்டால் மட்டுமே அதை நாம் பராமரிப்போம் என்பது. ஆனால், தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய பார்வை அதைக்காட்டிலும் உயர்வானதாக இருக்க வேண்டும். அப்படியென்றால் '**அனைத்தும் தேவனுடையது, எனவே அதிக பொறுப்போடு நாம் பாதுகாக்கவும் பராமரிக்கவும் வேண்டும்.'உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்**' (1 கொரிந்தியர் 4:2).

இதே கருத்தை இயேசு ஓர் உவமையில் சொல்லுவதை நாம் கவனிக்கலாம். '**தாலந்து**' உவமையில் அவர், கொடுக்கப்பட்ட தாலந்துகளை ஊழியக்காரர்கள் எப்படிப் பராமரித்தார்கள் என்பதை வைத்து எஜமான் நியாயம் செய்தார் என்று கூறினார். ஆக, தேவன் நம்மை நம்பி நமக்கு கொடுத்தவைகளை நாம் பராமரிக்க வேண்டும். இவ்வுலகில் நம்முடைய வாழ்வின் நோக்கமும் அதுவாகவே இருக்க வேண்டும். பல வேளைகளில் நாம் நம் வாழ்வின் இந்நோக்கத்தை மறந்து விடுகிறோம். (மத்தேயு 25:21) அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.

நம்முடைய வாழ்வின் இறுதியிலும் இப்படியாகக் கேள்வி கேட்கப்படும் தேவன் நம்பிக்கையோடு நமக்கு கொடுத்தவைகளை நாம் எப்படிப் பராமரித்தோமோ அதை வைத்தே நமக்கு நீதி செய்யப்படும். நமக்கு கொடுக்கப்படுகிறவைகளை நான் எவ்வாறு பராமரிக்கிறேனோ அது அவ்வளவாய் என் ஆவிக்குரிய நிலையை பிரதிபலிக்கிறது. நான் ஒழுங்கான பராமரிப்பு செய்யாமல் நல்ல கிறிஸ்தவனாக இருக்க முடியாது. '**எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங்கேட்கப்படும்**'. (லூக்கா 12:48).

(தொடரும்...)

சிறுவர் பகுதி

# தேவமனிதன் – 5

Dr.பிரெய்ஸி

**ஹெ**லோ குழந்தைகளே! நீங்கள் அனைவரும் நன்றாக இருப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்கள் கட்டுரைகளை ஒவ்வொரு மாதமும் படித்து வருகிறீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த மாதம் மூன்று தேவ மனிதர்கள் பற்றிப் பார்ப்போம்–**சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ.**

தானியேல் 3ம் அதிகாரத்தில் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபதுமுழ உயரமும், ஆறுமுழ அகலமுமான ஒரு பொற் சிலையைப் பண்ணினார். எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை ஜனங்கள் கேட்கும்போது, அவர்கள் தாழவிழுந்து, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளவேண்டும். எவனாகிலும் தாழ விழுந்து, அதைப் பணிந்துகொள்ளாமற்போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவான் .

தேவமனிதர்கள் **சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ** ராஜாவின் தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும், அவர் நிறுத்தின பொற் சிலையைப் பணிந்துகொள்ளாமலும் இருந்தார்கள். நேபுகாத்நேச்சார் உக்கிரகோபங்கொண்டு சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் சிலையை வணங்க சொன்னார்.

**சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ** என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களைத் **தப்புவிக்க வல்லவரா யிருக்கிறார்;** அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்; விடுவிக்காமற் போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்க க்கடவது என்று உறுதிபடத் தெரிவத்தார்கள்.

அன்புள்ள குழந்தைகளே, நீங்கள் மூன்றாம் அதிகாரத் தொடர்ந்து படிக்கும்போது, என்ன நடந்தது என்பதை அறிவீர்கள்.

அன்புள்ள குழந்தைகளே, இந்த மூன்று மனிதர்களின் விசுவாசத்தை நீங்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தேவன் விடுவிக்காமற்போனாலும், அவர்கள் ராஜாவின் தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, அவர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்றார்கள். அதுபோலவே, நம் உயிரையே விலையாகக் கொடுக்க நேர்ந்தாலும் தேவனுக்கு விரோதமானவைகளை நாம் எப்போதும் எதிர்க்க வேண்டும். ஏனெனில், தேவன் பாவத்தை வெறுக்கிறார். நாம் நம் தேவனை மட்டுமே வணங்க வேண்டும், அவருடைய வார்த்தைகளுக்கு மட்டுமே கீழ்ப்படிய வேண்டும்.

அன்புடன்

**பிரெய்ஸி அக்கா**


✞

# அழுகையும் வெற்றியும்

1. **அன்னாள் அழுதாள் - சாமுவேல் பிறந்தான்.** (1 சா. 1:7,20)
2. **ஆகார் அழுதாள் - தண்ணீர் துரவைக் கண்டாள்.**(ஆதி. 21:16,19)
3. **எசேக்கியா அழுதான் - தன் ஆயுளோடு** 15 **ஆண்டுகள் கூட்டப்பட்டது.** (2 இரா.20:3)
4. **நெகேமியா அழுதான் - எருசலேமின் அலங்கம் கட்டப்பட்டது.** (நெகே. 1:4)
5. **எஸ்தர் அழுதாள் - யூதருக்கு அழிவிலிருந்து விடுதலை** (எண். 8:3-9)
6. பாபிலோனிலிருந்த யூதர்கள் அழுதார்கள் - விடுதலை பெற்று ஒரு ஜாதியாய் நிலைநாட்டப்பட்டார்கள். ( சங் 137:1)
7. மகதலேனாமரியாள் அழுதாள். உயிர்த்தெழுந்த இயேசுவை முதலாவது தரிசித்தாள். (யோவான். 20:1,11,16,18; மாற்கு. 16:9).

# அடையாளங் காணாத பறக்கும் தட்டு, பழங்கால வானவெளிப் பயணிகள், பெர்மூடா முக்கோணம்

தமிழில். Bro. சாமுவேல் ராஜ், சத்தி



மக்கள் வசிக்கும் இவ்வுலகம் மட்டுமே சகலமும் அல்ல என்பதை ஆதியில் இருந்து மக்கள் உணர்ந்திருக்கின்றனர். தாங்கள் எங்கிருந்து வந்தனர், வாழ்க்கையில் தங்களுடைய நோக்கம் என்ன என்று மக்கள் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஆராய்ந்து பார்த்துள்ளனர். இந்தக் கிரகத்தின் வாழ்க்கையை விட, இதற்கு பின்னர் நல்ல வாழ்க்கை அமையுமா என்று கண்டுபிடிப்பதில் கூட மக்கள் தீவிரம் காட்டியிருகின்றனர். தங்களுடைய வாழ்க்கை செல்ல வேண்டிய பாதைக்கு தேவன் மட்டுமே ஒரே பதில் என்பதை பல வேளைகளில் மனிதர்கள் ஏற்றுக்கொள்ள விரும்புகின்றனர். ஆனால், பழங்காலத்தைப் போலவே, நமது நாட்களிலேயும் தேவ நம்பிக்கைக்கு எதிராக, விநோத கற்பனையான மாற்றுக் கருத்துக்களை வழங்கும் மக்கள் இருந்து வருகின்றனர்.


**ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்** என்பதாக 2 தீமோத்தேயு 4ம் அதிகாரம் 3,4 வசனங்களில் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினார். இன்று மக்கள் அதிக புலமை பெற்றிருந்தாலும், உண்மையிலேயே வியப்படைய வைக்கும் வகையில் பல கேள்விகளுக்கும் விஞ்ஞானம் விடையளித்து வரும் வேளையிலும், நமது காலத்திலும் கூட எல்லா விதமான கட்டுக் கதைகளையும் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்கும் மக்கள் இருக்கின்றனர். பழங்கால விண்வெளிப் பயணிகளைப் பற்றிய **கடவுள்களின் இரதம்** என்ற கதையையும், இன்னும் பல கற்பனைக் கதைகளையும் புனைந்த எரிக் வான் டானிக்கென் என்பவரைப் போன்ற ஆசிரியர்களையும் பின்பற்றுகின்றனர். இப்படிப்பட்ட தனி மனிதர்கள் தவறான விஞ்ஞானத்தைக் கற்பிக்கின்றனர். பவுல் தீமோத்தேயுவுக்கு மீண்டுமாக எழுதும்போது **உன்னிடத்தில்**

**ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு சீர்கேடான வீண் பேச்சுக்களுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு** என்றார். (1 தீமோ 6:20).

விஞ்ஞானம் எழுப்பும் எந்த எதிர்ப்பும் தவறான விஞ்ஞானமாகவே இருக்க வேண்டும் என்பதை பவுல் புரிந்து கொண்டார். ஏனெனில், எந்த தேவன் நாம் எப்படி வாழ வேண்டுமென்று கூறி, தமது குமாரனையும் நமக்கு அளித்தாரோ, அவரே பூமியையும் அதிலே நாம் காணும் சகலவற்றையும் படைத்தார்.

வேற்றுக் கிரக மக்களைக் கண்டதாகக் கூறுவோரைப்பற்றி என்ன? பெர்முடா முக்கோணம் பற்றிய கதைகளைப் பற்றி என்ன? பூமியில் இறங்குதளம் அமைத்தும், பூமியின் பல பகுதிகளில் விநோதமும் கற்பனையுமான வரைவுகள் பலவற்றை உருவாக்கியதாகவும் கூறும் பழங்கால விண்வெளிப் பயணங்களின் கதைகளைப் பற்றி என்ன? இந்தக் காரியங்கள் உண்மையா?

### *பறக்கும் தட்டு*




பூமி மட்டுமே ஜீவராசிகள் வாழத் தகுதியான இடம் என தேவன் கண்டார் என்பதாக தேவனுடைய வசனம் எங்கும் கூறவில்லை. வேற்றுக் கிரகங்களில் உயிர் வாழும் ஜீவன்கள் இருந்தால்தேவன் அவற்றைப் படைத்தார் என நிரூபிக்க முடியும். ஏனெனில், ஏதாவது ஒரு வகை நுண்ணறிவு திட்டமிட்டால் அன்றி, ஜீவன் உருவாக முடியாது. கவலைக்குரிய காரியம் என்னவென்றால், வேற்றுக்கிரக ஜீவனைக் கண்டதாகக் கூறும் பலர் உண்மையிலேயே சத்தியத்தைத் தேடுபவர்களாக இல்லை. வேதாகமத்தைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. அவர்கள் செய்ய முயற்சிப்பது எல்லாம், ஒரு மோசடிக் கதையைக் கூறி பணத்தைக் குவிப்பதுதான்.

பிற கிரகங்களிலிருந்து வந்த மனிதர்களிடம் பேசியதாகவும் அவர்களோடு புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருப்பதாகவும் கூறி முற்றிலும் போலியான திரைப்படங்கள் எடுத்தவர்களும் உண்டு. இப்படிப்பட்ட ஒவ்வொரு தனிப்பட்ட நிகழ்ச்சியிலும், இவ்வாறு கொண்டாடுவோரை விஞ்ஞானம் பரிசோதித்துப் பார்க்கும்போது கீழ்க் கண்ட மூன்று நான்கு காரியங்களில் ஒன்று உண்மையெனக் கண்டுபிடிக்கப்பட்டது: அந்நபர் ஒளியின் மாயத் தோற்றத்தைப் பார்த்திருக்கக்கூடும் அல்லது தான் பணமும் புகழும் பெற வேண்டி, ஒரு மோசடியான கதையைக் கூறி சகலரையும் அந்நபர் ஏமாற்ற முயற்சி செய்திருக்கக்கூடும் அல்லது மக்களை முட்டாளாக்கும் விளையாட்டுக்காரராக அவர் இருக்கக்கூடும்.

பறக்கும் தட்டு பூமியில் இறங்கியதை விஞ்ஞானப்பூர்வமாக சரியாக நிரூபிக்கும் எந்த ஒரு நபருக்கும் 10,000 டாலர்கள் வழங்குவதற்கு பிலிப் கிளாஸ் என்பவர் அறிவித்திருந்தார். என்றபோதிலும், ஒரு நபர் கூட அந்த 10,000 டாலர் பரிசை உரிமை கொண்டாட முன் வரவில்லை.

இதுவரை, பிறர் உரிமை கோரிய போதிலும், பறக்கும் தட்டு காணப்பட்டதாகக் கூறும் ஒவ்வொரு முறையும், விஞ்ஞானிகள் தங்களுக்கு கிடைக்கும் சாட்சியத்தை கவனமாக சோதித்து சரியான விளக்கம் அளித்து வந்துள்ளனர். நீங்கள் கேள்விப்பட்ட பறக்கும் தட்டு பற்றி உங்கள் வகுப்பில் விவாதிக்க நீங்கள் விரும்பக்கூடும். அப்போது, நிச்சயமாக இதைப்பற்றியும் இது ஒரு மோசடி என்பதையும் அறிந்த ஒரு மாணவனை நீங்கள் சந்திப்பீர்கள். ஏமாறுவது எளிது, மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். ஏனெனில், அவர்கள் தேடும் காரியங்களுக்கு கிறிஸ்து பதில் வைத்திருக்கிறார் என்பதை அடையாளம் காண முடியாமல், வேறு எதையோ தேடிக் கொண்டிருக்கின்றனர்.

### *பெர்மூடா முக்கோணம்*




பெர்மூடா முக்கோணம் கரீபியன் கடலில் ஒரு பகுதி. இங்கு மர்மமான காரியங்கள் நடை பெறுவதாக ஒரு வதந்தி. இப்பகுதியில் ஆகாய விமானங்கள் பல காணாமற்போனதாகவும் நிறைய கப்பல்கள் மாயமாய் மறைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. உண்மையைச் சொல்லப்போனால், அலாஸ்கா வளைகுடாவில் எண் ணற்ற விமானங்கள் மூழ்கிப் போயிருக்கின்றன. அலாஸ்கா கடற்கரைக்கு அப்பால் பல கப்பல்கள் காணாமற்போயிருக்கின்றன. இவை அனைத்தின் எண்ணிக்கையானது பெர்மூடா முக்கோணம் பகுதியில் தொலைந்ததைவிட அதிகமாகும். பெர்மூடா முக்கோணத்தில் கண்டுபிடிக்கப்படாத கப்பல்களும், விமானங்களும் குறைந்த எண்ணிக்கை தான். இவற்றில் சில, நிலப்பரப்பில் காணப்படும் புயலை விட கரீபியன் கடலில் தோன்றும் மிகவும் வித்தியாசமாகக் காட்சி தரக்கூடிய இடியுடன் கூடிய புயலில் சிக்கியவை. சில கப்பல்கள் குகைகளில் உற்பத்தியாகும் நீர்ச்சுழற்சிகளில் சிக்கி மூழ்கியவை ஆகும். என்றாலும், உண்மையிலேயே காணாமற்போன கப்பல்கள், விமானங்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவே.



(தொடரும்...) ✝

# குடும்பம் கட்டப்படுவதில்...

சகோ. KM. பிலிப் – பவானி

**கு**டும்பம் என்ற பெயர்ச்சொல்லில் கணவன், மனைவி, பிள்ளைகள் சேர்ந்ததுதான் குடும்பமாகும். ஒரு வீடு கட்டுவதில் அஸ்திபாரம் போடுதல், சுற்றுச்சுவர் எழுப்புதல், மேற்கூரை அமைத்தல், வீட்டிற்கு தேவையான வர்ணங்கள் பூசி ஜொலிக்கச் செய்தல் ஆகிய பணிகள் அடங்கும். அதைப் போலவே, ஒரு குடும்பம் நேர்த்தியாய் கட்டப்படுவதில் பிதாவாகிய தேவன் ஆண், பெண்ணை, கணவன் மனைவியாக இணைத்து அஸ்திபாரம் போடுகிறார் (ஆதி 2:18,24) அந்த அஸ்திபாரத்தின் மேல் வீட்டை அடைக்கலப்படுத்தும் சுற்றுச்சுவரை கணவன் எழுப்புகிறார். அந்த வீடு மழை, வெய்யில், காற்றுகளிலிருந்து மூடிப் பாதுகாக்க மனைவியானவள் மேற்கூரை அமைக்கிறாள். அந்த வீடு பிரகாசமாய் ஜொலிக்க பிள்ளைகள் வர்ணம் பூசுகிறார்கள். இப்பொழுது ஒரு முழுமையான வீட்டைக் காண்கிறோம். இதுவே குடும்ப வாழ்க்கையிலும் உண்மையாகும்.

யோபுவின் வாழ்க்கையை கவனித்தால் தேவனே, யோபுவை **உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவன்** என்று பாராட்டும் வாழ்க்கை வாழ்ந்தார் (யோபு 1:8). ஏழு ஆண் பிள்ளைகள், மூன்று பெண் பிள்ளைகள் மத்தியில்தான் இப்படிப்பட்ட பக்தியுள்ள வாழ்க்கை வாழ்ந்து காட்டினார். இந்த பாசம், பண்பு, பிள்ளைகளின் குடும்பத்திலும் பிரதிபலித்தது. தொடர்ந்து அவர்களுடைய வாழ்க்கையை கர்த்தருக்குப் பயப்படும் அஸ்திபாரத்தின் மீது பார்த்துப் பார்த்து கட்டி எழுப்பினார். இந்த வசனத்தைக் கவனியுங்கள். விருந்து என்ற நிலையில் யோபு, **ஒருவேளை என் பிள்ளைகள் பாவஞ்செய்து, தேவனைத் தன் இருதயத்தில் தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி அதிகாலமே எழுந்து அவர்கள் எல்லாருடைய இலகத்தின் படியேயும் சர்வாங்க தகன பலிகளை யோபு செலுத்துவான்** என்று பார்க்கிறோம் (யோபு 1:5) இப்படி யோபு தன் பிள்ளைகளை தேவ சமூகத்தில் ஒப்படைத்து வளர்த்தான். சுதந்திரம் என்ற நிலையில் யோபு தன் பிள்ளைகளை இழந்து விடவில்லை. சாத்தான் பொறாமைப்படும் அளவு குடும்பம் பெருமைக்குரியதாய், செழிப்பாய் ஓங்கி நின்றது. அது மட்டுமல்ல, 'அதினால் அந்த மனுஷன் (யோபு) கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாய் இருந்தான் (1:3) என்று பார்க்கிறோம்.

பிரியமான (கணவன்) தகப்பன் மார்களே! பாவ இருள் சூழ்ந்த இவ்வுலகில் நம் பிள்ளைகளால் நம் குடும்பம் செழிப்பாய், சிறப்பாய் அமைய யோபுவைப்போல் பிள்ளைகளுக்கு முன் உத்தமுமாய் வாழ்ந்து காட்டுவோம்; நடக்க வேண்டிய வழியில் நடத்துவோம் (நீதி. 22:6).

அப்பொழுது நம் குடும்பம் தேவ கரத்தில் பாதுகாப்பாய், செழிப்பாய், பாராட்டுக்குரியதாய் இருக்கும்.

அன்பானவர்களே! மனைவிமார் குறித்து, **புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்** என்று வேதம் சொல்லுகிறது. தேவனால் அஸ்திபாரம் போட்டப்பட்டு கணவனால் எழுப்பப்பட்ட வீடு முழுமை அடைவதும், மூடி பாதுகாப்பதும் மனைவியின் கரத்தில் இருக்கிறது. 2 ராஜா : 4ஆம் அதிகாரத்தில் உள்ள வரலாற்றுப் பகுதியில் சூனேம் ஊரில் வசித்து வந்த சூனேமியாள் என்று ஊரின் பெயரில் அழைக்கப் படும் ஒரு மனைவியின் வாழ்க்கையை உற்று நோக்குவோம். இவளைக் குறித்த அறிமுகமே கனம் பொருந்திய ஒரு ஸ்திரீ என்பதாகும். மரியாதைக்குரியவள் மட்டுமல்ல போதுமான ஐசுவரியமும் உள்ளவளாயிருந்தாள். இப்படிப்பட்டவர்களிடம் பெருமை மேலோங்கி இருந்திருக்க வேண்டும். ஆனால், வரலாற்றில் இவள் எப்பொழுதும் தன் தாழ்மையையே வெளிப்படுத்தியிருக்கிறாள். **தாழ்ந்த சிந்தை உள்ளவர்களிடத்தில் ஞானம் உண்டு** (நீதி. 11:2) என்று வேதம் சொல்லும் இந்த ஞானத்தால், தேவ மனிதன் எலிசாவிடம், தன் வீட்டில் போஜனம் பண்ண **வருந்திக் கேட்டுக் கொண்டாள்** என்று பார்க்கிறோம். தன் வீட்டில் தங்கியிருந்த எலிசா தன்னை அழைத்த போது அவள் வந்து வாசற்படியிலே நின்றாள் (15) என்பது அவளது தாழ்மை மனப்பாங்கையே வெளிப்படுத்துகிறது. **கர்த்தர் தாழ்மையுள்ளவர்களை நோக்கிப் பார்க்கிறார்** (சங் 138:6) என்பது மட்டுமல்ல, **தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.** கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார் (யாக். 4:6,10) என்பதன்படி மலடியா யிருந்த சூனேமியாள் கேட்பதற்கு முன்பே தேவன் குழந்தை பாக்யத்தை கொடுத்து **தாய்** என்ற நிலைக்கு உயர்த்தினார். '**மலடியைப் பிள்ளைத்தாச்சியாக்கி, சந்தோஷமாய் வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார்** என்பதை சூனேமியாள் அனுபவித்தாள் (சங். 113:9). மேலும், இவளுடைய தாழ்மை குணம் கணவனையும் சமுதாயத்தில் தகப்பனாகக் கௌரவித்தது (நீதி 31:23) தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமையும் ஜீவனுமாம் என்பதை மனைவியாகிய சூனேமியாளின் சாதனையாகக் காண்கிறோம்.

பொதுவாக குழந்தை பாக்யம் இல்லையென்ற பொழுது அந்த வீட்டில் கணவன், மனைவிக்கிடையே பரஸ்பர ஐக்கியம் இருக்காது. ஓயாமல் சண்டையும், வெறுப்புமே மேலோங்கிநிற்கும். ஆனால், இந்த சூனேமியாளின் வீட்டிலே சமாதான நிலையையே பார்க்கிறோம். எலிசா அவளிடம் **உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?** என்று கேட்டபோது, அவள் என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கி றேன் **என்று சொன்னது,** தேவன் கொடுத்த வாழ்க்கையை தேவ சித்தத்திற்கே ஒப்புக்கொடுத்து விட்டாள் என்பதையே காட்டுகிறது.

ஆம், நம் குடும்பத்தில் தவிர்க்க முடியாத குறைகள் இருக்கும் பொழுது அது தேவ சித்தம் என்று ஒப்புக் கொடுப்பதே சமாதான வாழ்க்கைக்கு வழியாகும். இதைத்தான் பவுல், **போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்** என்று கூறுகிறார் (1 தீமோ 6:6). வாழ்க்கையில் குறை இருந்தாலும் தேவனுக்கென்று தான் செய்ய வேண்டியதை நிறைவாகச் செய்தான். தேவ ஊழியக்காரர் எலிசாவுக்கு ஒரு குறைவுமின்றி நிறைவாய் செய்து மேல் வீட்டில் இடம் கொடுத்து கனப்படுத்தினாள். ஆம், ஊழியரைக் கனப்படுத்துவதென்பது, தேவனைக் கனப்படுத்துவதாகும். **என்னைக் கனப்படுத்துகிறவனை நான் கனம் பண்ணுவேன்**(1 சாமு 2:30) என்பதின்படி, சூனேமியாளின் குடும்பம் வெட்கப்பட்டு நிற்காதபடி குழந்தை பாக்யத்தைக் கொடுத்து குறைவை நிறைவாக்கி தேவன் கனப்படுத்தினார். ஞானமாய் செயல் பட்ட சூனேமியாள் தேவ ஓத்தாசை பெற்று குடும்பத்தை நிறைவாய் கட்டி முடித்தாள். அன்பான மனைவிமார்களே ! இது தேவன் கொடுத்த வாழ்க்கை என்பதை விசுவாசியுங்கள். அவர் சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். **கர்த்தரை நம்பி நன்மை செய்யுங்கள்.** உங்கள் குடும்பம் முழுமையாய் கட்டப்படும். நிறைவு பெற்றோங்கும்.

பிரியமானவர்களே! மனைவியாகிய சூனேமியாள் எல்லாவற்றிலும் தேவனுக்கு முதலிடம் கொடுத்தாள். தன் குடும்ப வாழ்க்கையில் மிக அத்தியாவசியமான குழந்தை பாக்யம் இல்லாமலிருந்தும், அதையே எண்ணி எண்ணி புலம்பிக் கொண்டிராமல், தேவன் கொடுத்த இந்த வாழ்க்கையில் தேவனுக்கு கொடுக்க வேண்டிய முதலிடத்தை விருப்பத்தோடு கொடுத்தாள். பெருமைக்காகவோ, கட்டாயமாகவோ இதை செய்யாமல் மனப்பூர்வமாய் கொடுத்தாள். எலிசாவை தன் வீட்டில் ஏற்று உபசரித்து கனப்படுத்திய இச்செயல் தேவனுக்கு முதலிடம் கொடுக்கும் பண்பை வெளிப்படுத்துகிறது. இந்த பண்பு அவளுக்கு குழந்தை பாக்யத்தை கூட கூட்டிக் கொடுத்தது. மேலும், குடும்ப மகிழ்ச்சியை எப்பொழுதும் தக்கவைத்துக் கொள்ளும் ஒரு மனைவியாக செயல்பட்டாள். ஒரு காலகட்டத்தில் தேவன் கொடுத்த குழந்தை தாயின் மடியிலே படுத்து மரித்துவிட்டான். உடனே சூனேமியாள் மிகுந்த துக்கமடைந்து, புலம்பி; கணவனையும், உற்றார் உறவினர்களையும் துக்கத்தில் மூழ்கடித்திருக்க வேண்டும். ஆனால், தெய்வ பக்தியுள்ள சூனேமியாள் தன் கணவனுக்கு கூட துக்கத்தை ஏற்படுத்தாமல் தேவன் மீது கொண்ட உறுதியான விசுவாசத்தால் எலிசாவிடம் மன்றாடி மகனை மீண்டும் உயிரோடு பெற்று, குடும்ப மகிழ்ச்சியை நிலை நாட்டினாள். **உம்மை உறுதியாய் பற்றிக் கொண்ட மனதை உடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்** என்று வாக்கை (ஏசா. 26:3) தேவன்

சூனேமியாளின் வாழ்க்கையிலே நிறைவேற்றினார். ஆம் குடும்பத்தின் மகிழ்ச்சியை நிலை நாட்டுவதில் மனைவிமார்கள் தங்கள் பொறுப்புகளை விசுவாசத்தோடு நிலைநாட்ட முடியும் என்பதே தேவ வழி காட்டுதலாகும்.

குடும்பத்தை பிரகாசிக்கச் செய்யும் பிள்ளை தாவீதை கவனிப்போம். தாவீது இளம் வயதிலேயே தனக்குக் கிடைத்த எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்தி காரியசமர்த்தனாகத் திகழ்ந்தான். சுரமண்டலம் வாசிப்பதில் திறமைசாலி (1. சாமு. 18.10) சிங்கம், கரடி, கோலியாத் போன்ற எதிரிகளை எதிர்கொள்வதில் தைரியசாலி, தேசத்தை பராமரிப்பதில் அதிக ஞானமும், தைரியமும், சாமர்த்தியமும் உள்ளவனாய் விளங்கினான். **இவன் யாருடைய மகன்?** என்று இஸ்ரவேலின் முதல் ராஜாவால் மூன்று முறை ஆர்வமாய் கேட்கும் அளவுக்கு தன் குடும்பத்திற்கு நற்பெயர் சூட்டினான். மேலும், தன்னை கொலை செய்யும் அளவுக்கு எதிரியாய் பார்த்த சவுலையே தன் ஞானமான பக்தியுள்ள செயல்களால் என் குமாரனாகிய தாவீதே என்று மூன்று முறை அழைக்கும்படி செய்தான் (1 சாமு. 26:17,21,25), மேலும், இயேசுவையே, **தாவீதின் குமாரன்** ( மத் 1:1; 9:27; 20:30; 21:9) என்று பெருமையாய் அழைக்கும் அளவுக்கு தன் வாழ்க்கையில் தன் குடும்பத்தை பிரகாசிக்கச் செய்தார். பிதாவாகிய தேவனும், **என் தாசனாகிய தாவீது** (எசே. 34:23,24) என்றும் **ஈசாயின் குமாரனாகிய தாவீது என் இருதயத்திற்கேற்றவன்** (அப் 13:22) என்றும் சொல்லி தாவீதையும் அவன் குடும்பத்தையும் இன்று வரை பிரகாசமாய் வைத்திருக்கிறார். இப்படியே புதிய ஏற்பாட்டிலும் தீமோத்தேயுதான் வாழ்ந்த பக்தியுள்ள வாழ்க்கையால், சகோதரர்களுக்குள்ளே நற்சாட்சி பெற்றவனாயும் (அப் 16:2), பவுலால் **விசுவாசத்தில் உத்தம குமாரனென்றும், மாயமற்ற விசுவாசி என்றும், வெட்கப்படாத ஊழியக்காரனென்றும்** பாராட்டப்படுகிறான். இந்தப் பாராட்டு அவன் குடும்பத்தை சார்ந்த பாட்டி லோவிசாளுக்கும், தாய் ஐனிக்கேயாளுக்கும் பெருமை சேர்க்கக்கூடிய பிரகாசமாய் இருக்கிறது என்பதே உண்மையாகும்

அன்பான தேவ ஜனமே! நீங்கள் ஒரு கணவனாகவோ, மனைவியாகவோ, பிள்ளைகளாகவோ இருக்கலாம். எந்நிலையிலும் தேவன் உங்களுக்குக் கொடுத்த பொறுப்புகளை தெய்வ பயத்தோடே சரியாய் நிறைவேற்றுங்கள். தேவன் உங்கள் குடும்பத்தை பூரண ஆசீர்வாதத்தால் நிரப்புவாராக. உங்கள் குடும்பங்கள் மகிழ்ச்சியால் பொங்கி வழிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். ஆமென்!! ✝

எபிரெயர் நிருபம்

அதிகாரம் - 1

# இயேசுவானவர் தேவ தூதரிலும் மேலானவர்

Bro.V. ஆசீர்வாதம், சென்னை.

**1.1 பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்**

**1:1 பூர்வ காலங்களில்:**

பூர்வகாலம் என்பது குமாரன் (இயேசு) வெளிப்படுவதற்கும், தேவன் குமாரன் மூலமாய் தமது சித்தத்தை வெளிப்படுத்துவதற்கும். முந்தைய காலமாகும்.

**1:1. பங்குபங்காக, வகைவகையாக**

கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்பு பழைய ஏற்பாட்டை ஆராய்ந்து பார்க்கையில் ஆதாம் முதல் நோவா வரைக்கும் ஒரு பங்காகவும், நோவா முதல் ஆபிரகாம் வரைக்கும் இன்னொரு பங்காகவும், ஆபிரகாம் முதல் மோசே வரைக்கும் மற்றொரு பங்காகவும், மோசே முதல் கிறிஸ்து வரைக்கும் ஒரு பங்காகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். அவரவர்களுக்கு வகை வகையாக வெளிப்படுத்தப்பட்டது. ஆதாமுக்கு கனியைப் பற்றிய ஒரு கட்டளையும், நோவாவுக்கு ஒரு கப்பலைக் கட்டும் கட்டளையும், ஆபிரகாமுக்கு விருத்தசேதனமாகிய ஒரு கட்டளையும், மோசேயின் காலத்தில் ஓய்வுநாள் மற்றும், பல்வேறு சடங்காச் சாரங்களாகிய கட்டளைகளையும் கர்த்தர் கொடுத்தார். இதிலே ஆதாமுக்கு கொடுக்கப்பட்டக் கட்டளை நோவாவுக்கு இல்லை. நோவாவுக்கு கொடுக்கப்பட்டக் கட்டளை ஆபிரகாமுக்கு இல்லை. இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுக்கப்பட்ட ஓய்வுநாள் கட்டளை ஆபிரகாமுக்கு இல்லை. இவ்விதமாய் பழைய ஏற்பாடு பங்குப் பங்காகவும், வகை வகையாகவும் கொடுக்கப்பட்டது.

**1:1. தீர்க்கதரிசிகள் மூலமாய்த் திருவுளம் பற்றினார்:**

வேதாகமத்தில் தேவதூதர்கள் மூலமாய் சொல்லப்பட்ட வசனங்களும், தீர்க்கத்தரிசிகள் மூலமாய் சொல்லப்பட்ட வசனங்களும், குமாரன் மூலமாய் சொல்லப்பட்ட வசனங்களும் அடங்கியிருக்கிறது.

**1. தேவதுதர்கள் மூலமாய் சொல்லப்பட்ட வசனங்கள் எவை?**

a. எபி. 2:2 தேவதூதர்கள் மூலமாய் சொல்லப்பட்ட வசனம்.

b. அப். 7:53ன்படி தேவதூதர் மூலமாய் கொடுக்கப்பட்ட வசனம் நியாயப்பிரமாணமாகும்.

C. கலா. 3:19ன்படி நியாயப்பிரமாணம் தேவதூதரைக்கொண்டு மத்தியஸ்தன் (மோசே) கையிலே கொடுக்கப்பட்டது.

**2. தீர்க்கதரிசிகள் மூலமாய் சொல்லப்பட்ட வசனங்கள் எவை?**

a. **II** பேதுரு. 1:19 தீர்க்கதரிசனவசனங்கள் நமக்கு உண்டு. தீர்க்கதரிசிகள் வரப்போகிற மேசியாவைக் குறித்தும், மேசியாவைக் கொண்டு தேவன் செய்யப்போகிறக் காரியங்களை குறித்தும் முன்னறி வித்தார்கள்.

b. யோவான். 5:39 வேதவாக்கியங்கள் என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறது என்று இயேசுவானவர் சொன்னார்.

c. லூக். 24:44 மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதி இருக்கிறது என்றும் இயேசு சொன்னார். பெரும்பாலான தீர்க்கதரிசிகள் மேசியாவைக் குறித்தும் முன்னறிவித்தார்கள்.

d. **II** பேதுரு. 3:2 பரிசுத்த தீர்க்கத்தரிசிகளால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகள் என்றும் சொல்லப்பட்டிருக்கிது. மோசே என்னும் தீர்க்கத்தரிசியைக்கொண்டு இஸ்ரவேல் கர்த்தர் ஜனங்களுக்கு நியாயப்பிரமாணத்தைத் தந்தார்.

**3. குமாரன் மூலமாய் சொல்லப்பட்ட வசனங்கள் எவை?**

தேவன், தமது குமாரனைக்கொண்டு வெளிப்படுத்திய வசனங்கள் கிறிஸ்துவின் உபதேசங்களாய் இருக்கின்றது (யோவான். 7:16, 17:8, 8:26)

a. இந்த உபதேசம் மனுஷருக்கு இரட்சிப்பாயிருக்கிறது. (யோவான். 8:31-34)

b. கிறிஸ்துவின் உபதேசங்கள் மனுஷரை பரிசுத்தமாக்குகிறது. ( யோவான்.15:3)

c. கிறிஸ்துவின் உபதேசங்கள் மனுஷருக்கு நித்திய வாழ்வாக இருக்கிறது. (யோவான். 8:51)

d. கிறிஸ்துவின் உபதேசங்கள் மனுஷருக்கு நியாயத்தீர்ப்பாக இருக்கிறது. (யோவான். 12:48)

**1:2 இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.**

**1:2 கடைசி நாட்கள் என்பது எது?**

கடைசி நாட்கள் என்பது கடைசியாக தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும் நாட்களாகும். இந்த கடைசி நாட்களை அறிந்துக்கொள்ள மூன்று அடையாளங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் திருவுளம் பற்றுவது (எ. 1:2)

2. கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, பரிசுத்த ஆவியின் வருகை ஒரு அடையாளமாயிருக்கிறது. (அப். 2:17, யோவே. 2:28)

3. கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய சபை ஸ்தாபிக்கப்படுவது (ஏசாயா 2:1-3).

ஆகிய இம்மூன்றும் உலகத்தில் நிறைவேற்றப்படும்போது. உலகத்திற்கு தேவன் கொடுக்கும் கடைசி வாய்ப்பாக இது அமையும். இவைகளுக்குப் பின்பு வேறு வெளிப்பாடு ஒன்றும் இல்லாமல் முடிவு ஒன்றே வரக்கூடிய எதிர்பார்ப்பாக இருக்கும். நியாயப்பிரமாணத்திற்கும் இது கடைசிக் காலமாகும்

**1:2 குமாரன் மூலமாய் திருவுளம்பற்றினார்**:

குமாரன் சுயமாய் பேசாமல், தேவன் எவைகளை கட்டளையிட்டாரோ அவைகளையே பேசினார். (யோவான். 12:49) தேவனிடத்தில் கேட்டவைகளையே பேசினார். (யோவான். 8:40) தேவனுடைய வார்த்தைகளை பேசினார். (யோவான். 3:34) குமாரனேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரமுடியாது (யோவான். 14:6)

**1:2 இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார்**:

அதாவது தேவன், தமது குமாரனாகிய இயேசுவை எல்லாவற்றிற்கும் வாரிசு உரிமையாளராக்கினார். எல்லாவற்றையும், அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

**1. யோவான் ஸ்நானகனுடைய சாட்சி**:

பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்தார். (யோவான். 3:35)

**2. இயேசுவானவருடைய சாட்சி**:

சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது (மத்.11:27, 28:18)

**3. அப்போஸ்தலருடைய சாட்சி**:

சகலமும் அவருக்கு (இயேசுவுக்கு) கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது. (எபே. 122, 1, 1கொரி. 15:27-28)

**1:2 இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்:**

எபே 3:11 இயேசு கிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன்....

கொலே 1:16 பரலோகத்திலுள்ளவைகள் பூலோகத்திலுள்ளவைகள், யாவையும் இவரைக்கொண்டும் இவருக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டது.

யோவா. 1:3 அவராலேயல்லாமல் ஒன்றும் உண்டாகவில்லை.

**1:3 இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.**

**1:3 இவர் (இயேசு) அவருடைய (பிதா) மகிமையின் பிரகாசம்**

- தேவன் – விளக்கு.
- இயேசு – அந்த விளக்கின் ஒளியாயிருக்கிறார்.
- தேவன் – சூரியன்.
- இயேசு – சூரிய ஒளிக்கதிர்.
- தேவன் – மகிமையாயிருக்கிறார்.
- இயேசு – மகிமையின் பிரகாசம்

**இயேசு தேவனுடைய பிரதிபலிப்பு** :

உதாரணமாக : பழைய ஏற்பாட்டில் ஆசரிப்பு கூடாரத்தின் மேல் தேவனுடைய மகிமை தங்கியது (யாத். 40:34) அந்த கூடாரமும், அதற்குரிய ஆராதனை முறைமைகளும். இஸ்ரவேலருக்கு மகிமை யாயிருந்தது. உடன்படிக்கைப் பெட்டியை பெலிஸ்தியர் பிடித்துக் கொண்டு போனபோது, மகிமை இஸ்ரவேலை விட்டு நீங்கியது (1சாமு 4:22), ஆனால், புதிய ஏற்பாட்டில் இயேசு தேவனுடைய மகிமையாகவும், பிரதிபலிப்பாகவும் இருக்கிறார்.

**1:3 அவருடைய தன்மையின் சொரூபம்**

அதாவது தேவனுடைய குணாதிசயங்களின் பிரதிபலிப்பா யிருக்கிறார். உதாரணமாக : தேவன் அன்பாக இருக்கிறார் (1 யோவான் 4:8) அன்பின் சொரூபமாக அதாவது உருவமாக இயேசுக் கிறிஸ்து இருக்கிறார். I யோவான் 3:16 – ன் படி, இவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே. அதாவது நமக்காக உயிரை இவர் தியாகம் செய்ததினாலே இவருடைய மரணத்தின் மூலமாக தேவனுடைய அன்பை அறிந்துக் கொள்கிறோம். தன் சிநேகிதனுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிமான அன்பு இல்லை (யோவான் 15:13) தேவனுடைய அன்பு என்னும் குணாதிசயத்தின் பிரதிபலிப்பாகவும் அல்லது மொத்த உருவமாகவும் இருக்கிறார்.

**1:3 சர்வத்தையும் தாங்குகிறார்**

இயேசுவானவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்ததுமில்லாமல் தம்முடைய வார்த்தையினால் எல்லாவற்றையும் தாங்குகிறவராயும் இருக்கிறார். கொலே 1:17ன்படி எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

**1:3 தம்மாலே தாமே பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணினார்** :

அதாவது இயேசுவானவர் தாமாகவே முன்வந்து நமக்கு பாவ மன்னிப்பை உண்டாக்கினார். எபி. 10:6–9 வரை வாசிக்கும்போது, பலியையும், காணிக்கையையும் நீர் விரும்பவில்லை என்று சொன்ன பின்பு, தேவனே! உம்முடைய சித்தத்தின்படி அதாவது, உம்முடைய விருப்பத்தின்படிசெய்ய இதோ வருகிறேன் என்று சொன்னார். அதாவது பாவமன்னிப்பை ஏற்படுத்துவதற்கு தேவனுடைய விருப்பத் தின்படிசெய்ய இதோ வருகிறேன் என்று சொன்னபோது, தேவனு டைய விருப்பத்தை நிறைவேற்ற இயேசுவானவர் தாமே முன்வந்தார்; தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார் (எபே 5.2) தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நித்திய மீட்பை உண்டுபண்ணினார் (எபி 9:12). மேலும் ஏசா 6:8ன்படி என் காரியமாய் யாரை அனுப்புவே என்று தேவன் கேட்டபோது, **இயேசுவானவர் இதோ நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்** என்று சொன்னதாக ஆவியானவர் தெரியப்படுத்துகிறார். அது இயேசுவைத்தான் குறிக்கும் என்பதற்கு சில வசனங்கள் ஆதாரமாயிருக்கிறது (ஏசா6:8–10, யோவான் 12:37–47). இவ்விதமாக இயேசு தாமாக முன்வந்து தேவனுடை காரியங்களை நிறைவேற்றி தம்முடைய சொந்த விருப்பத்தின் பேரிலேயே பாவமன்னிப்பை உண்டாக்கினார் (கலாத். 1:4).

(தொடரும்...)

**இயேசுவின் பாதத்தில் விழுந்தவர்கள்**
**(மத்தேயு 15:30)**

சீஷர்கள் - மத்தேயு. 28:9.

பாவியாகிய ஸ்திரீ - லூக்கா 7:36-38

அப்போஸ்தலனாகிய யோவான் - வெளி. 1:17

ஜெபாலயத் தலைவனாகிய யவீரு - மாற்கு 5:22

லேகியோன் பிசாசு பிடித்திருந்தவன் - லூக்கா 8:30,35

லாசருவின் சகோதரி மரியாள் - லூக்கா 10:39; யோவான் 11:32

சீரோபேனிக்கேயா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரீ - மாற்கு 7: 25, 26

# அவசியமான ஐந்து காரியங்கள் !

**Bro**. பாண்டியன்

***கி***றிஸ்தவ வாழ்வில் நாம் வளர்ச்சியடைவதையே தேவன் விரும்புகிறார். ஆனால், அதற்கு நிறைய தடைகளை நாம் சந்திக்க வேண்டியுள்ளது. நமக்கு விருப்பமல்லாத காரியங்களையும், வருத்தம் ஏற்படுத்தக்கூடிய மனிதர்களையும் கடந்து செல்ல வேண்டியுள்ளது. ஆண்டவர் சொன்னது போல நாம் உலகத்திற்கு வெளிச்சமாகவும் பூமிக்கு உப்பாகவும் இருக்க வேண்டுமானால் நாம் வசனப்படி நடந்து நற்கிரியைகளினால் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் அப்படி நம் விசுவாச வாழ்க்கைக்கு வேண்டிய அவசியமான ஐந்து காரியங்களைக் குறித்து தான் இந்த கட்டுரையில் தியானிக்க இருக்கிறோம்.

முதலாவது, நம்மிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட **விசுவாசத்திற்காக** தைரியமாய் போராடுவது அவசியமாய் இருக்கிறது (யூதா 1:3) ஏன் ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசம் ? காரணம் இரட்சிப்புக்கு முன்பாக ஒருவன் தன்னை காம விகாரத்திற்கு ஒப்புக்கொடுத்து இருக்கிறான். மனுஷர் இப்படியாக உண்மை தேவனை அறியாமல் அழிந்து போகிற உருவங்களுக்கு ஒப்பாக மாற்றியதால் தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்து விட்டார் (ரோமர் 1:24) இப்படிப்பட்ட உலகத்திலிருந்துதான் தேவன் நம்மைத் தெரிந்தெடுத்து விலையேறப்பெற்ற விசுவாசத்தை நம்மிடம் ஒப்புவித்துள்ளார். இந்த விசுவாசத்தில் நிலைத்திறாதபடி, உலகத்தின் கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம், சிற்றின்பங்கள் போன்றவை நம்மை நெருக்கி பலன் கொடாதபடி செய்கிறது. அநேகர் அடிப்படையான சபைக்கூடுதலைக் கூட விட்டு விட இவைகளே காரணமாகிறது. ஆகவே, பாவத்திற்கு எதிராக போராட வேண்டும் என்று எபி. 12:4ல் காண்கிறோம். ஆகவே, நம் விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்காக நாம் தைரியமாகப் போராட வேண்டியது அவசியமாகிறது.

இரண்டாவதாக, பரலோகத்தில் நமக்கு நிரந்தரமான மகிழ்ச்சி வைக்கப்பட்டிருந்தாலும் நாம் உலகத்தில் கொஞ்ச காலம் **துன்பப்பட வேண்டியது அவசியம்** என்கிறார் பேதுரு அப்போஸ்தலன் (1 பேதுரு 1:6) நகைக் கடையில் அலங்காரமாக காட்சியளிக்கும் ஒரு ஆபரணம் அதற்கு முன்பாக அக்கினியால் சோதிக்கப்பட்டு வருவது போல நம்முடைய விசுவாசமும் துன்பங்களின் மூலமாக சோதிக்கப்பட்டு மெருகேறுகிறது: ஒருவன் என்னைப்

பின்பற்றி வர விரும்பினால் தன் சிலுவையை எடுத்துதான் வரவேண்டும் என்றார் ஆண்டவர். சிநேகிதர், வறுமை, நெருங்கிய உறவுகள் மூலமாகவும் நம் விசுவாசம் சோதிக்கப்படலாம் என்கிறது வேதம். ஒரு விஷயம் கவனியுங்கள்; வாழ்வில் நமக்கு வரும் துன்பங்களே நமக்குத் தாழ்மையைக் கற்றுத் தந்து தேவனையே நாம் சார்ந்திருக்கக் கற்றுக் கொடுக்கிறது. ஆகவே, துன்பப்பட வேண்டியது அவசியம் ஆகும்.

மூன்றாவதாக, **இடறல்கள்** வருவது அவசியம் என்கிற எதிர்பாராத ஒரு விஷயத்தை ஆண்டவரே சொல்கிறார் (மத். 18:7) வண்டி டிரைவிங் லைசென்ஸ் பெற சில கடினமான முறைகளைக் கடைபிடிப்பது போல கிறிஸ்தவ வாழ்விலும் சில எதிர்பாராத எதிர்ப்புகளை, இடறல்களை நாம் சந்திக்க நேரிடுகிறது. பல நேரங்களில் இடறல்கள் பண விஷயத்தில் வருகிறது. அதனால் தான் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூருகிற கடனே அல்லாமல் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் என்று வாசிக்கிறோம். இருக்கிறவைகள் போதும் என்ற எண்ணம் வேண்டும் என்றால் அதற்கான ஞானத்தைத் தரும்படி தேவனிடம் ஜெபிக்க வேண்டும். அநீதத்தின் கூலியை விரும்பி ஒரு மிருகத்தால் கடிந்து கொள்ளப்பட்ட பிலேயாமைப் போலவோ, காட்டிக்கொடுத்த யூதாஸை போலவோ இருக்கக்கூடாது. ஏனெனில், இடறல் யாரால் வருகிறதோ **அவனுக்கு ஐயோ** என்று பார்க்கிறோம். சிம்சோனுக்கு பெண் விஷயம் இடறலாய் இருந்தது. தேவனுடைய நாமம் தூஷிக்கப்படாதபடிக்கு நாம் நல் நடக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும் (1பேதுரு 2:12).

நான்காவதாக, மனுஷருக்குக் கீழ்படிகிறதைப் பார்க்கிலும் **தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே** அவசியமாயிருக்கிறது (அப் 5:29) பொதுவாகக் கிறிஸ்தவர்கள் மேலான அதிகாரமுள்ள யாவருக்கும் கீழ்ப்படியது அவசியம் என்கிறது. உதாரணமாகப் பெற்றோர், ஆசிரியர், போலீஸ், வேலை செய்யுமிடத்திலுள்ள மேலானவர்கள் யாவருக்கும் கீழ்ப்படிய வேண்டும். ஆனால், பக்திக்குரிய காரியங்களில் நாம் தேவனுக்கும், அவருடைய வார்த்தைக்கும் மட்டுமே நாம் முன்னுரிமைக் கொடுக்க வேண்டும். அதனால் தான் இயேசுவைக் குறித்து பிரசங்கிக்கக் கூடாது என்ற பரிசேயர், வேதபாரகர். ஆசாரியன், ஆலோசனை சங்கத்தார். ரோமர் போர்ச்சேவகர் போன்ற அதிகாரத்தை விட தேவனுக்குக் கீழ்படிவதே அவசியம் என்று அப்போஸ்தலர் அவர்களிடம் தைரியமாக எடுத்துச் சொன்னார்கள். இயேசுவின் காலத்தில் விசுவாசமுள்ள அதிகாரிகள்

தங்கள் விசுவாசத்தை மறைத்து வைத்தார்கள். யோவான் 9:22, யோவான் 12:42 நாம் அப்படி இருக்கக் கூடாது. சவுல் கீழ்ப்படியாததால் ராஜ்ஜிய பாரத்தை இழந்து போனான். ராஜாவுக்கே கீழ்ப்படியாத மருத்துவச்சிகள் ஆண் குழந்தைகளைக் கொலை செய்யாமல் தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆண் பிள்ளைகள் உயிரோடே காப்பாற்றி தேவனிடம் நன்மையைப் பெற்றார்கள் (யாத்.1:17,20,21)

இறுதியாக **தேவனுக்கென்று கொடுப்பது** அவசியமானது என்று அர்தசஸ்டா ராஜா எஸ்றாவுக்கு எழுதின நிருபத்திலேக் குறிப்பிட்டான் என்று வாசிக்கின்றோம் (எஸ்றா 7:20) ஏன் நான் தேவனுக்குக் கொடுக்க வேண்டும் என்று யாராவது கேட்டால் வேதம் சொல்கிறது நீ சம்பாதிக்கிறதற்கு பெலன் தருகிறவரே தேவன் தான் என்பதை அறிய வேண்டும் (உபா. 8:18) உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ண வேண்டும் நீதி. 3:9,10, அப்போது உனக்குப் பெரிய ஆசீர்வாதம் கிட்டும். மல். 3:10 அதனால் தான் புதிய ஏற்பாட்டில் விசனமாயல்ல, மனதில் நியமித்ததை மனப்பூர்வமாய் கொடுப்பவர்களிடம் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி 9:7,8) ஆகவே, அவசியமான காரியங்களை நாம் பின்பற்றி தேவ ஆசீர்வாதம் பெறுவோம். தேவ கிருபையும், சமாதானமும் உங்களோடே இருப்பதாக ஆமென்.

✝

## முன்னே நீங்கள்.....

இந்த வழியாய் நடக்கவில்லை... யோசுவா:3:4

தேவனுக்கு தூரமாயிருந்தீர்கள்... எபேசியர்:2:13

பாவத்துக்கு அடிமைகளாயிருந்தீர்கள்... ரோமர்:6:17

தேவனுடைய இரக்கம் பெறவில்லை... 1பேதுரு 2:10

## 10.08.2024 பம்மல் பகுதியில்,
## நடந்த இலவச மருத்துவ முகாமின் போது . . .





## 11.08.2024 மனலியில் நடந்த,
## இலவச மருத்துவ முகாமின் போது...






## World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Tuesday 6.30 - 7.00 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7.30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



**"Registered" with RNI No: TNTAM/2006/20466**
Postal regn. No. Erode/26/2024 - 2026
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2024 - 2026**
Published on 17/18 th of Every Month
Posted at Erode HPO on 20/21 of Every Month.

## எங்களது இதர வெளியீடுகள்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.**

**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்




**வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்**
- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.
ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.
விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701. தமிழ்நாடு, இந்தியா.

To:

**திருமறை தியானம்**
**நம்பிக்கை** TV
செவ்வாய் – காலை 6:30 – 7:00 மணி
**நம்பிக்கை** TV
வெள்ளி – காலை 7:30 – 8:00 மணி

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.